# செய்தி வெளியீடு

Ontario

நவம்பர் 14, 2022

# ஒன்ராறியோ முன்னேற்ற அறிக்கையை வெளியிடுவதுடன் மாகாணத்தைக் கட்டியெழுப்புவதற்கான அதன் திட்டத்தையும் மேம்படுத்துகின்றது

## *பொருளாதார நிச்சயமற்ற தன்மை மற்றும் உலகளாவிய பணவீக்கத்தின் காலத்தில் ஒன்ராறியோவின் 2022 இலையுதிர் காலப் பொருளாதார அறிக்கை நடைமுறைக்கு வருகின்றது*

ரொறன்ரோ — இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் 2022ம் ஆண்டுப் பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வையும் – ஒன்ராறியோவின் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தையும் (Ontario’s Plan to Build):*வெளியிட்டார்:*முன்னேற்றம் குறித்த ஒரு புதுப்பிப்பு.* ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தினால் முதன் முதலாக உருவாக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையையும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அதன் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் புதிய இலக்குடன் கூடிய நடவடிக்கைகள், மாகாணத்தின் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் மற்றும் குடும்பங்கள் மற்றும் வணிகங்களுக்குச் செலவுகளைக் குறைக்க உதவுதல் ஆகியவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

அத்துடன், ஒன்ராறியோவின் பொருளாதாரம் மற்றும் நிதிக் கண்ணோட்டம் பற்றிய ஒரு புதுப்பிப்பையும், அதிக பணவீக்கம் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரச் சவால்களை உலகம் எதிர்கொள்வதால், அதன் நெகிழ்வான மற்றும் பொறுப்பான திட்டம் மூலம் நிச்சயமற்ற தன்மை மற்றும் ஆபத்தைச் சமாளித்து மாகாணத்தை எவ்வாறு நிலைநிறுத்தி வருகின்றது என்பதை எடுத்துக்காட்டும் தகவல்களையும் அரசாங்கம் வழங்குகின்றது.

"நாம் இதுவரை ஒன்றாகப் பயணித்துள்ளோம்," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். “முதலீடுகள் மற்றும் நல்ல வேலைகளை ஈர்ப்பதில் இருந்து, ஆயிரக்கணக்கான திறமையான வர்த்தகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது மற்றும் குடும்பங்களுக்கான செலவுகளைக் குறைக்க உதவுவது வரை நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். இந்த நிச்சயமற்ற பொருளாதார காலங்களின் ஊடாக நாம் செல்லும்போது, குடும்பங்கள், மூத்தவர்கள் மற்றும் சிறு வணிகங்களுக்கு ஆதரவளிக்கும் புதிய இலக்குடன் கூடிய நடவடிக்கைகள் மூலம் எங்கள் அரசாங்கம் அதன் திட்டத்தை மேம்படுத்துகின்றது.

அரசாங்கத்தின் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் இலக்குடன் கூடிய நடவடிக்கைகளின் சிறப்பம்சங்கள்:

- முன்மொழியப்பட்டுச் சட்டத்தால் செயற்படுத்தப்பட்டபடி, போட்டித்தன்மையை அதிகரிப்பதற்காகவும், வேலைகளை ஈர்ப்பதற்காகவும், வணிகங்கள் தங்கள் சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்திருக்கும் தன்மைக்குரிய இலக்குகளை எவ்வாறு தொடர்வது என்பதில் கூடுதல் தெரிவுகளை வழங்குவதற்காகவும் சுத்தமான எரிசக்திக் கடன் பதிவேடு ஒன்றைத் தன்னார்வமாகத் தொடங்குதல்.
- சிறு வணிக வரி விகிதத்தின் கட்ட-வெளியேற்றத்தின் முன்மொழியப்பட்ட நீட்டிப்பு மூலம் சுமார் 5,500 சிறு வணிகங்கள் பயனடையும் வகையில், ஒன்ராறியோவின் சிறு வணிகங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் $185 மில்லியன் வருமான வரி நிவாரணம் வழங்குதல்.
- சிறு வணிகச் சொத்துத் துணைப்பிரிவை ஏற்றுக்கொள்ளும் அனைத்து நகராட்சிகளிலும் உள்ள சிறு வணிகங்களுக்கான சொத்து வரிக் குறைப்புகளைத் தானாகவே அதற்கு ஈடானதாக்குதல்.
- ஊனமுற்ற நபர் ஒருவர், ODSP இல் மாதாந்த வருமான விலக்காகப் பெற்றுக்கொள்ளும் தொகையை $200லிருந்து $1,000 ஆக அதிகரிப்பதன் மூலம் அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை மேலதிகமாக வைத்திருக்க அனுமதிக்கும் மாற்றங்களைச் செய்தல். இது தற்போது சுமார் 25,000 தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தை மேலதிகமாக வைத்திருக்க அனுமதிக்கும் அத்துடன், மேலும் 25,000 நபர்களைத் தொழில்புரிய ஊக்குவிக்கக் கூடும்.
- கடுமையாக ஊனமுற்ற குழந்தைகளுக்கான உதவித் திட்டத்திற்கான (Assistance for Children with Severe Disabilities program) அதிகபட்ச மாதாந்தத் தொகையை, ஜூலை 2023 இல் தொடங்கி, ஆண்டுதோறும் பணவீக்கத்திற்கு ஏற்ப மாற்றத் திட்டமிடுதல்.
- ஒன்ராறியோ ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டத்தின் (Ontario Disability Support Program - ODSP) கீழ் உள்ள அடிப்படைக் கொடுப்பனவுகளை ஜூலை 2023 இல் தொடங்கி ஆண்டுதோறும் பணவீக்கத்திற்கு ஏற்ப மாற்றத் திட்டமிடுவதன் மூலம் ஊனமுற்ற குறைந்த வருமானம் உடையவர்களுக்கான அதிகரிக்கும் செலவுகளைச் சமாளிக்க உதவுதல்.

- தேவை உள்ள தொழில்களில் அடுத்த படியை எடுப்பதற்காக 393,000 பேருக்கும் அதிகமானவருக்கு ஏற்கனவே உதவியுள்ள, திறன் மேம்பாட்டு நிதியை (Skills Development Fund) மொத்தமாக $145 மில்லியன் ஆக்குவதற்காக 2022–23 இல் சமீபத்திய சுற்று நிதியுதவிக்கு மேலதிகமாக $40 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- அதிக இடைநிலைப் பாடசாலை மாணவர்களைத் திறமையான வர்த்தகங்களில் அல்லது குழந்தைப் பருவக் கல்வியில் ஈடுபட ஊக்குவிப்பதற்காக,இரட்டைக் கடன் திட்டத்தை (Dual Credit program) விரிவுபடுத்துவதற்கு, 2023-24 இல் தொடங்கி இரண்டு ஆண்டுகளில் $4.8 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- பெட்ரோல் மற்றும் எரிபொருள் (டீசல்) மீதான வரி விகிதம் டிசம்பர் 31, 2023 வரை லிட்டருக்கு 9 சதமாக இருக்கும் வகையில் எரிவாயு வரி மற்றும் எரிபொருள் வரி விகிதங்களுக்கு வெட்டுக்களை நீட்டிக்க முன்மொழிதல்.
- 2023 இல் ஒரு நபருக்கான கொடுப்பனவை அதிகபட்சமாக $1,000 ஆல் அதிகரித்து, ஜனவரி 2023 முதல் 12 மாதங்களுக்கு அனைத்து பெறுநர்களுக்கும் Guaranteed Annual Income System இன் (உத்திரவாதப்படுத்தப்பட்ட வருடாந்த வருமான முறை) கட்டணத்தை இரட்டிப்பாக்க முன்மொழிவதன் மூலம், ஒன்ராறியோவின் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்களில் சுமார் 200,000 பேருக்கு செலவுகளை நிர்வகிக்க உதவுதல்.
- மாகாணத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பை ஈர்க்கவும், ஒன்ராறியோ முழுவதும் உள்ள சமூகங்களில் அதிக இடப் படப்பிடிப்பை ஊக்குவிக்கவும், Ontario Production Services Tax Credit க்கான (ஒன்ராறியோத் தயாரிப்பு சேவைகள் வரிக் கழிவு) தகுதியான செலவினங்களை விரிவாக்க முன்மொழிதல்.

"அன்றாடப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை உயர்த்துவதன் மூலம் குடும்ப வரவு செலவுத் திட்டங்களைக் குறைக்கும் உயர்ந்த பணவீக்கத்தின் காலத்தில் நாங்கள் இருக்கிறோம்" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். “ஆனால், ஒன்ராறியோவின் பொருளாதாரம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அதன் மக்கள் ஆகியவர்களின் தாங்கும் தன்மை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எங்கள் நிதி நெகிழ்வுத்தன்மையைப் பராமரிப்பதற்கான எமது அரசாங்கத்தின் திட்டத்தில் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன், எனவே எதிர்காலத்திற்காக மாகாணத்தைக் கட்டியெழுப்பும் இந்த வேளையில் மக்களுக்கும் வணிகங்களுக்கும் இலக்குடன் கூடிய ஆதரவையும் நாம் வழங்க முடியும்.”

அரசாங்கத்தினால் முதன் முதலாக உருவாக்கப்பட்ட ஒன்ராறியோ முன்னேற்ற அறிக்கையின் சிறப்பம்சங்கள்:

- கடந்த இரண்டு வருடங்களில், உலகளாவிய வாகன உற்பத்தியாளர்கள் மூலமும் மின்சார வாகன பேட்டரிகளுக்கான வினியோகிஸ்தர்கள், மற்றும் பேட்டரி உதிரிப்பாகங்கள் மூலமும் $16 பில்லியன் தொகையை, மாற்றியமைக்கும் வாகன முதலீடுகளில் ஒன்ராறியோ ஈர்த்துள்ளது.

- கடந்த ஆண்டில், $2.5 பில்லியன் தொகையை, எஃகு துறையில் மாற்றத்தை ஆதரிப்பதுடன் குறைந்தளவில் கார்பனைக் கொண்ட எஃகு உற்பத்தியில் மாகாணத்தை உலகின் முன்னணி உற்பத்தியாளராக மாற்ற உதவும் முதலீடுகளை அது ஈர்த்தது.
- ஊதியச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் மின்சாரக் கட்டண நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் சிறு வணிகங்களுக்கு $4.0 பில்லியன் தொகையை வழங்கி, 2022 இல் சுமார் $8.7 பில்லியன் தொகையைச் செலவுகளிலிருந்து சேமிப்பாக்கி ஒன்ராறியோ வணிகங்களுக்கான ஆதரவை ஆதரித்தல்.
- ஒன்ராறியோவில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட முக்கிய கனிமங்கள் குறித்த திட்டத்திற்காகவும் (Critical Minerals Strategy) Ring of Fire வரையுள்ள அனைத்து-பருவகாலத்துக்கும் ஏற்ற சாலைகள் போன்ற முக்கியமான மரபுவழி உட்கட்டமைப்புகளை ஆதரிப்பதற்காகவும் சுமார் $1 பில்லியனுக்கும் மேலான அர்ப்பணிப்புடன், Ring of Fire உள்ளிட்ட பகுதியிலும் இருக்கும் முக்கியமான கனிமங்களின் பொருளாதார ஆற்றலைக் கட்டவிழ்த்து விடுதல்.
- 2018 மற்றும் 2020 க்கு இடையில் ஒன்ராறியோத் தொழிற்பயிற்சித் திட்டங்களில் 71,700 க்கும் மேற்பட்ட புதிய பதிவுகள், 25,000 க்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சிச் சான்றிதழ்கள் (Certificates of Apprenticeship) மற்றும் 5,600 தகுதிச் சான்றிதழ்கள் (Certificates of Qualification) ஆகியவற்றுடன், திறமையான வர்த்தகங்களுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தல்.
- 2020 முதல் மருத்துவத் தாதியர்கள் மற்றும் தனிநபர் பராமரிப்புப் பணியாளர்கள், அத்துடன் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட நிரலாக்கத்தின் மூலம் ஒன்ராறியோவில் உரிமம் பெற்று மருத்துவத் தாதியர்களாக மாறியுள்ள 800 க்கும் மேற்பட்ட சர்வதேசக் கல்வியறிவு பெற்ற மருத்துவத் தாதியர்கள் உட்பட 11,700 க்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்களைச் சேர்த்தல்.
- சமூகங்களை இணைக்கவும், போக்குவரத்து இடையூறு இன்றி மக்களும் பொருட்களும் மாகாணம் முழுவதும் பயணிப்பதற்கும், அடுத்த 10 ஆண்டுகளில் Highway 413 ஐயும் Bradford Bypass ஐயும் உருவாக்குதல் மற்றும் Highway 401 ஐ விரிவுபடுத்துதல் உட்பட நெடுஞ்சாலை விரிவாக்கம் மற்றும் நிர்மாணத்துக்காக அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் $25.1 பில்லியனை முதலீடு செய்தல்.

## *விரைவுச் செய்திகள்*

- உலகளாவிய பொருளாதார நிலைமைகள் நிச்சயமற்றதாக இருப்பதால், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல்வேறு காரணிகளால் உந்தப்பட்டு, அரசாங்கம் வேகமான வளர்ச்சி மற்றும் மெதுவான வளர்ச்சி நிலைகளை உருவாக்கியுள்ளது, பொருளாதார நிலைகள் அடுத்த சில ஆண்டுகளில் ஒன்ராறியோவின் நிதிநிலைமையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது பற்றிய மேலதிக வெளிப்படைத்தன்மையை இது வழங்கலாம்.

- தற்போதைய பொருளாதார நிச்சயமற்ற தன்மை மற்றும் நிதிநிலைமைச் சவால்களின் மத்தியில் மாகாணத்தின் கட்டமைப்புப் பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது, மேலும் ஒன்ராறியோவின் நிதிநிலைமையைச் சமநிலைக்குக் கொண்டு வருவதற்கான அதன் முயற்சிகளை மீண்டும் இரட்டிப்பாக்குகின்றது.
- அரசாங்கம் இப்போது 2022-23இல் $12.9 பில்லியன் பற்றாக்குறையைக் கணித்துள்ளது, இது *2022* பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட கண்ணோட்டத்தை விடக் கிட்டத்தட்ட $7 பில்லியன் குறைவாகும்.
- இடைப்பட்ட காலத்தில், அரசாங்கம் பற்றாக்குறையை 2023-24 இல் $8.1 பில்லியன் தொகையாலும் 2024-25 இல் $0.7 பில்லியன் தொகையாலும் குறைக்கும். 2022–23 உட்பட, இது பற்றாக்குறைக் கண்ணோட்டத்தில் $18.1 பில்லியன் தொகை ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும், *2022* பட்ஜெட்டுடன் ஒப்பிடும்போது கடன் தேவைகளில் ஒட்டுமொத்தமாக $26.1 பில்லியன் குறைவையும் குறிக்கிறது.

**மேலதிக வளங்கள்**

*ஒன்ராறியோவின் 2022ம் ஆண்டுப் பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு – ஒன்ராறியோவின் கட்டியெழுப்புவதற்கான திட்டம்: முன்னேற்றம் குறித்த ஒரு புதுப்பிப்பு*

வாசிக்கவும் *Background பொருளாதார மற்றும் : நிதிக் கண்ணோட்டம்*

வாசிக்கவும் *ஒன்ராறியோவின் கட்டுமானத் திட்டத்தின்* சிறப்பம்சங்கள் *முன்னேற்றம் குறித்த ஒரு புதுப்பிப்பு*

செலவினங்களைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் மற்றும் அரசாங்கம் எப்போது நிவாரணம் வழங்குகிறது என்பதைப் பற்றி மேலும் படிக்கவும்

வாசிக்கவும் *2022 பட்ஜெட்: ஒன்ராறியோவின் கட்டுமானத் திட்டம்*

---

**ஊடகத் தொடர்புகள்**

ontario.ca/finance-news

*Disponible en français*

Emily Hogeveen
அமைச்சர் அலுவலகம்
647-294-6166
Emily.Hogeveen@ontario.ca

Scott Blodgett
தகவற் தொடர்புப் பிரிவு
416-728-9791
Scott.Blodgett@ontario.ca